

அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் திருச்சி தென்னூரில் குடியிருப்பு வாசிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மு.அன்பழகன், வைரமணி, அரசு அதிகாரிகள், மண்டல தலைவர்கள். மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் முனைவர் கோவி. செழியன் இளைஞர் அணியினருக்கு ஆலோசனைகளை வழங்கினார். உடன் செ.இராமலிங்கம், முனைவர் குறிஞ்சி வாணன், க. நசீர்முகமது, ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, மிசா.என்.மனோகரன், சுந்தர.ஜெயபால், உதயா இரவிச்சந்திரன், உள்ளிட்ட பேரூர் செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.



திருவாரூரில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் சிறுபான்மை இன மக்களின் காப்பான் தி.மு.க. எனும் மாபெரும் கருத்தரங்கத்தில் அமைச்சர் ஆவடி எஸ்.எம்.நாசர் பேசினார். பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வக்பு வாரிய தலைவர் நவாஸ்கனி ,மாநில செயலாளர் அ.சுபேர்கான், மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.ஆர்.தாஜுதீன் மற்றும் தஞ்சை ,நாகை மாவட்ட சிருபான்மைப்பிரிவு நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் பணிகள் குறித்து அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சத்ய பிரதா சாகு, முனைவர் அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், ச.முரசொலி எம்.பி, ஒரத்தநாடு முன்னாள் எம்.எல்.ஏ., எம்.இராமச்சந்திரன், நெ.செல்வம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# தூய்மைப் பணியாளர்கள் - நல வாரிய உறுப்பினர்களுக்கு நல உதவிகள்!

## நல வாரியத்தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்!

பெரம்பலூர்,அக்,13–

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் சார்பில் நடத்தப்பட்ட.நிகழ்ச்சியில், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமிகலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்கள், நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், தூய்மைப் பணியாளர்கள் உறுப்பினர் அடையாள அட்டைகளையும் வழங்கினார்.

இயற்கை மரண உதவி தொகை ரூ,25ஆயிரக்கான காசோலையையும்,1 பயனாளிக்கு திருமண உதவித்தொகை ரூ,5 ஆயிரக்கான காசோலையையும் என ரூ.30ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், 313 தூய்மை பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகளையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் வழங்கினார்.

பின்னர், தூய்மை பணியாளர்களிடம் தேவைகள் மற்றும் இதர கோரிக்கைகள் தொடர்பாக தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தலைவர் அவர்கள் கேட்டறிந்து, தொடர்புடைய துறைகள் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தமிழக அரசால் நடவடிக்கை எடுக்கக் கூடிய கோரிக்கைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு செயல்படுத்தக் கூடிய அனைத்து திட்டங்களும் முறையாக கிடைத்திடவும், மாதந்தோறும் குறித்த காலத்திற்குள் மாத ஊதியமும், அடிப்படை வசதிகளான கை, கால் உறை, சோப்பு உள்ளிட்டவைகளை பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வழங்கிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் தூய்மை பணியாளர்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு வருடம் தோறும் ரூ.15 கோடி நிதி ஒதுக்கி வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள். தற்போது தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 3,20,000 உறுப்பினர்கள் பதிவு செய்து பயன்பெற்று வருகின்றனர்.

மேலும், எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 10 லட்சம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். தற்போது பதிவு செய்துள்ள உறுப்பினர்களைத் தவிர தனியார் மருத்துவமனைகள், தனியார் உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் அனைவரையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் போது போது ஏற்படும் மரணங்களை தவிர்க்கும் வகையில், ரோபோடிக் என்று அழைக்கக்கூடிய நவீன இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு என்னென்ன தேவை என்பதைக் கண்டறிந்து அவற்றையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கேட்டு கோரிக்கை வைத்துள்ளீர்கள், உங்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதிபெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்கள் வெளிநாடு சென்று படிப்பதற்கு இதுவரை ரூ.15 லட்சம் வழங்கப்பட்டு வந்தது. இதனை ரூ.35 லட்சமாக உயர்த்தி வழங்கவும், விபத்து மரண உதவித்தொகையாக வழங்கப்பட்டு வரும் ரூ.5 லட்சத்தை ரூ.8 லட்சமாக உயர்த்தி வழங்கிட வேண்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய மாநில உறுப்பினர் நா.சேகர், மாவட்ட தாட்கோ மேலாளர் க.கவியரசு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வி. வாசுதேவன், மாவட்ட தாட்கோ திட்டக்குழு உறுப்பினர் மா. அருண் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் கொத்தமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் புதிதாக 8 கூடுதல் வகுப்பறை பள்ளி கட்டடம் கட்டுமான பணியினை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல்நாட்டி, துவக்கி வைத்தார்.



நாமக்கல் மேற்கு இளைஞர் அணி சார்பில் பயிற்சி பாசறைக் கூட்டம் நகர பொறுப்பாளர் ஆர்.நடேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல், சென்னை வட கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் ஆகியோர் கலந்து பேசினர். கூட்டத்தில் ஆர்.பாலாஜி, மல்லை ஜெகதீசன், கு.செங்கோட்டுவேல், கார்த்தி, பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் 45வது வார்டில் புதிய திட்டப் பணிகள்!

## மேயர் ரெங்கநாயகி ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

*கோவை, அக். 13-*

*கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண் 45க்குட்பட்ட கே.கே.புதூர் பகுதியில் 15வது மாநில நிதியின் கீழ் ரூ.1.50 கோடிமதிப்பீட்டில்நகர்நல நல்வாழ்வு மையம் கட்டும் பணி, வார்டு எண் 33க்குட்பட்ட கவுண்டம் பாளையம்பகுதியில்15வது மாநில நிதியின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டநகர்நல நல்வாழ்வு (UPHC) மையத் கட்டிடத்தை திறந்து வைத்து, வார்டு எண் 37க்குட்பட்ட வடவள்ளி பேருந்து நிலையத்தில் ரூ.65.00லட்சம்மதிப்பீட்டில் மகளிர்க்கான பிரத்தியேக சிறப்பு கழிப்பிடம் கட்டும் பணி, வார்டு எண் 38க்குட்பட்ட மீனாட்சி நகர் IOB குடியிருப்பு பகுதியில்இயக்குதல்மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளபுதியதரைமட்ட பாலத்தினை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.*

*இதில் மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, தலைமை பொறியாளர் விஜயகுமார், உதவி ஆணையர் துரை முருகன், மாநகர துணை தலைமை பொறி யாளர் இளங்கோவன், உதவி செயற்பொறியாளர்சவீதா, மண்டலசுகாதாரஅலுவலர் வீரன், உதவி பொறியாளர்கள்விமலா,ஹரிபிரசாத் மற்றும் கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் காணொலி வாயிலாக சிறப்புரை ஆற்றிய நிகழ்ச்சி கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் பிரகாஷ், கதிர்வேல், பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் திருச்செங்கோட்டில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர், கே.எஸ். மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ்காந்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் வீரமணி, கோகுல், தமிழரசு, பாலசுப்பிரமணியம், ஐயப்பன், நானா நானி கார்த்திக், தங்கமணி, ராகேஷ் கண்ணா, தீபன், லாவண்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.